International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 03 Issue: 01 January to March 2021 www.irjtsjournal.org

# பாரதியார் கட்டுரைகளில் பன்முகப்பார்வை

## (Multifaceted View in Bharathiyar Essays)

மு.கயல்விழி,

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி,*
*காஞ்சிபுரம்-631502.*

**ஆய்வுச் சுருக்கம்:**

பாரதியார் பன்முக ஆளுமைத்திறனும், இலக்கிய மேதமையும் கொண்டவராவார். கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம், சிறுவர்இலக்கியம், பயணஇலக்கியம், கடிதஇலக்கியம், கலைவிமர்சனம், சித்திரப்படைப்புகள், மொழிபெயர்ப்பு இலக்கியம் என்று பல்துறைகளில் அவர்மேதமை கொண்டவராவார். இவரைப்போன்று இலக்கியமேதமைஉடைய இலக்கியவாதியை இந்திய இலக்கிய உலகில்காண்பதரிது. பின்தங்கிய கல்விநிலையும், பிற்போக்குகுணமும், பழமைவாதமும் ஆதிக்கம் செலுத்திய ஒருகாலகட்டத்தில் துணிச்சலுடன் பல்துறைகளில் தன் அற்புதப்படைப்புகளைப்படைத்தளித்துக் காலத்தை வென்ற இலக்கியவாதியாய் அவர்வாழ்ந்தார். பாரதியாரின் பன்முகப்பார்வைக்குச் சான்றுகளாய்அவரதுபல்வேறு கட்டுரைகள் திகழ்ந்துவருகின்றன. அவை பல்வேறு இதழ்களில் பல்வேறுகாலங்களில் வெளிவந்தன.

**கருச்சொற்கள்:** பன்முகமேதமை, பல்துறைஅறிவு, ஒப்பற்ற இலக்கியவாதி, காலத்தை வென்றவர், பன்முகப்பார்வை

### முன்னுரை

இலக்கியங்கள் காலநிகழ்வுகளை எடுத்துரைக்கும் சான்றுகளாகும். அவற்றை இயற்றும் எழுத்தாளர்கள் அக்காலத்தின் பிரதிநிதிகளாவர். சிறந்த படைப்பாளிகள் என்று கருதப்பட்டவர்கள் இயற்றியபடைப்புகளில் எல்லாம் காலத்தை வென்று விடவில்லை. அவற்றுள் ஒரு சிலமட்டுமேதம் சிறப்பின்காரணத்தால் அமரத்தன்மை பெற்றுக்காலத்தைவென்றன. அந்தவகையில் சமகாலநிகழ்வுகளைச் சிறப்புடன் தம் படைப்புகளில் கையாண்டுகாலத்தை

வென்றபடைப்புகளை உருவாக்கியளித்ததலை சிறந்தபடைப்பாளிகளில் பாரதியார் முதன்மையானவராவார். அவர்படைத்த இலக்கியங்கள் பன்முகநோக்கு கொண்டவை. அவரதுபன் முகமேதமைத்திறன் அவரதுபடைப்புகளில்குறிப்பாக அவரின்கட்டுரைகளில் வெளிப்பட்டுநிற்கின்றது. அனைத்துத்துறைகளிலும் அவருக்கு இருந்தஞானம் அவரது ஒவ்வொருபடைப்பிலும் பளிச்சிட்டுநிற்கின்றது. நாட்டுமுன்னேற்றம், தேசவிடுதலை, பெண்முன்னேற்றம், சமூகச்சீர்திருத்தம், மொழிப்பற்று, கலைவளர்ச்சி போன்றபல்வேறுதுறைகளில் அவருக்கிருந்த அளப்பரிய அறிவாற்றல் அவரின்கட்டுரைகளில் காணக்கிடக்கின்றது. பாரதியாரின் கட்டுரைகள் அவரின்பன் முகத்திறனை (பன்முகப்பார்வையை) வெளிப்படுத்தும் துலாக்கோலாய்த்திகழ்ந்துவருகின்றன.

**பாரதியாரின்பன்முகப்பார்வை**

பாரதியார்தமிழுலகம் கண்டமாமணியாவார். அவர்பன்முக ஆளுமைத்திறனும், இலக்கியமேதமையும் கொண்டவராவார். கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம், சிறுவர்இலக்கியம், பயணஇலக்கியம், கடிதஇலக்கியம், கலைவிமர்சனம், சித்திரப்படைப்புகள், மொழிபெயர்ப்பு இலக்கியம் என்று பல்துறைகளில் அவர்மேதமை கொண்டவராவார். இவரைப்போன்று இலக்கியமேதமை உடைய இலக்கியவாதியை இந்திய இலக்கிய உலகில் காண்பதரிது. பின்தங்கிய கல்விநிலையும், பிற்போக்கு குணமும், பழமைவாதமும் ஆதிக்கம் செலுத்திய ஒருகால கட்டத்தில் துணிச்சலுடன் பல்துறைகளில்தன் அற்புதப் படைப்புகளைப் படைத்தளித்துக்காலத்தை வென்ற இலக்கியவாதியாய் அவர்வாழ்ந்தார். அவருக்கு ஒப்பாகக் கவியரசர் இரவீந்திரநாத்தாகூரை (Rabindranath Tagore) மட்டுமே கொள்ளலாம். ஆனால் அவரையும் தன் எதிர்காலத்தை உய்த்துணரும் ஞானத்திருஷ்டியால் விஞ்சிநிற்கின்றார். பாரதியாரின் பன்முகப் பார்வைக்குச் சான்றுகளாய் அவரது பல்வேறு கட்டுரைகள் திகழ்ந்துவருகின்றன. அவைபல்வேறு இதழ்களில் பல்வேறுகாலங்களில் வெளிவந்தன. பாரதியாரின் கட்டுரைகள் இடம் பெற்ற இதழ்கள் வருமாறு:

1.விவேக பானு

2.சுதேசமித்திரன்

3.சக்கரவர்த்தினி

4.இந்தியா

5.விஜயா

6.கர்மயோகி

7.சூரியோதயம்

8.ஞானபானு

9.கதாரத்னாகரம்

10.தேசபக்தன் வருஷஅனுபந்தம்

11.தனவைசிய ஊழியன்

12.Young India

13.The Common Weal

14.New India

15.Aarya

### தேசப்பற்று/விடுதலைப்போர்

பாரதியார் சிறந்த தேசப்பற்று கொண்டவர். அவர்தலைசிறந்த விடுதலைப் போராட்டவீரராவார். அவர் ஆங்கிலேயரின் அடிமைப்பட்டுக் கிடந்தபாரதத்தைக்கண்டு பொங்கி எழுந்து புரட்சிக்கோலம் பூண்டஅப்பழுக்கற்ற தேசியவாதி. ஆவர்படைப்புகள் நாட்டுப்பற்றைப் பொதுமக்கள்மனதில் தூண்டும்வண்ணம் அமைந்திருந்தன. அவரது கட்டுரைகளைப்படிப் போர்மனதில்விடுதலை உணர்வு பொங்கி எழுந்தது. அவரது தேசப்பற்றைத்தூண்டும் எழுத்துகளைக்கண்டு ஆங்கிலேயர் அஞ்சிநடுங்கினர். மாபெரும் இந்தியவிடுதலைப் போராட்டத் தலைவர்களான பாலகங்காதரத்திலகர் (Balagangathara Tilak), அரவிந்தகோஷ் (Sri Aurobindo Ghose), பின்சந்திரபால் (Bipin Chandra Pal), லாலாலஜபதிராய் (Lala Lajpath Rai) போன்றோரைப் போற்றியும் பாராட்டியும் கட்டுரைகள்தீட்டினார். பொதுமக்களிடம் விடுதலை உணர்வைத்தூண்டிய கட்டுரைகள்வருமாறு:

1.வந்தே மாதரம்

2.தாதாபாய் நௌரோஜி

3.தூத்துக்குடியில் சுதேசியம்

4.திலகரின் உபதேசம்

5.இந்தியக் காங்கிரஸ்மகாசபை

6.சுத்த தேசியம்

7.இந்திய ஸ்வராஜ்யசங்கம்

**பெண்கள்முன்னேற்றம்**

பாரதியார் பெண்கள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கரை கொண்டவராவார். பெண்களைப் போற்றும் பண்பாளராவார். விவேகானந்தரின் சீடரானநிவேதிதா அம்மையாரைக் (Sister Nivethitha) குருவாகக் கொண்டவர். அவர்காலத்தில் இளமைத்திருமணமும், விதவைக் கொடுமைகளும், பெண்சிசுக் கொலைகளும், பெண் கல்வி மறுப்பும், பெண் அடிமைத்தனமும், பலதாரமணமும் மலிந்துகாணப்பட்டன. அவற்றைத் துணிச்சலுடன் எதிர்த்துக்குரல் கொடுத்த பாரதியார், தம் கருத்தை மக்கள் மனதில்விதைக்கப் பலகட்டுரைகள்தீட்டினார். மாதர் முன்னேற்றத்தை வலியுறுத்திப் பலகட்டுரைகள் அவரால் வெளியிடப்பட்டது. தமிழ் நாட்டில் மாதர்முன்னேற்றத்திற்குப் பாடுபட்டமுன்னோடி அவரே. அவரது கருத்துகளை வெளிப்படுத்திய கட்டுரைகள்வருமாறு:

1.மாதர் கடமையும், மேன்மையும்

2.பெண் விடுதலை

3.பெண்கள் சர்வகலாசங்கம்

4.சகோதரி நிவேதிதா

5.இந்து ஸ்திரீகளின்சங்கம்

6.வீரத் தாய்மார்கள்

7.இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமானநிலை

8.மாதர்களின் சுதந்திரங்கள்

9.நமது ஸ்திரீகள்

10.நாகரீக வளர்ச்சியில்ஸ்திரீகளுக்குரியஸ்தானம்

**சமூகச்சீர்திருத்தம்**

பாரதியார் வாழ்ந்தகாலம் பழமைவாதமும், பிற்போக்கு கொள்கைகளும் மலிந்தகாலமாகும். அக்காலத்தில் ஜாதிவேறுபாடும், தீண்டாமை கொடுமையும் தலை விரித்தாடியது. சமூக ஏற்றத்தாழ்வுகளும் பெருகிக்காணப்பட்டன. பாரதியார் தீண்டாமைக் கொடுமையைக் கடுமையாக எதிர்த்தார். ஜாதி முறையை அடியோடு வெறுத்தார். சமூக ஏற்றத்தாழ்வுகள் அடியோடு ஒழிக்க முயன்றார். தன் சமூகச் சீர்திருத்தக்கருத்து களைத்தன் படைப்புகள் மூலம் நாடு முழுவதும் பரப்பினார். அவரது எழுத்துகள் தமிழ்நாட்டில் சமூகப்புரட்சி தோன்றுவதற்கு வழிகோலியது. சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வெளிப்படுத்தும் பலகட்டுரைகளை வெளியிட்டுத் தமிழகத்தின் முன்னோடிச் சமூகச்சீர்திருத்தவாதி என்ற பெயர் பெற்றார். அவர்தம் கட்டுரைகள் வருமாறு:

1.ஜாதிக் குழப்பம்

2.தீண்டாதவர்கள்

3.பஞ்சமர்

4.ஆச்சாரத் திருச்சங்கம்

5.சதி தகனம்

6.ஜாதி முறை

7.ஆசாரத் திருத்தமகாசபை

**தொழில் மற்றும் விவசாய முன்னேற்றம்**

உழவும் தொழிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று கருதியவர் பாரதியார். விவசாயமும், தொழிலும் செழித்தால் நாட்டில் வறுமை நீங்கி நாடு செழிக்கும் என்று நம்பினார். உழவர்களையும், தொழிலாளர்களையும், கைவினைஞர்களையும் போற்றினார். சுகவாழ்க்கைவாழ்ந்தகுறு நிலமன்னர்களையும், பிரபுக்களையும், ஜமீன்தார்களையும், பண்ணைக்காரர்களையும், செல்வந்தர்களையும் தூற்றினார். பாரதநாடு பொருளாதாரவளம் பெற்றுத் தன்னிறைவடைய வேண்டும் என்று தன்கனவைத்தன் படைப்புகள் வாயிலாக வெளிப்படுத்தினார். அவரது பொருளியல் அறிவை வெளிப்படுத்திய கட்டுரைகள்வருமாறு:

1.நெல் சாகுபடி

2.தொழில்கள்

3.கைத்தொழில்கள்

4.தொழிலாளர் பெருமை

5.கைத்தொழில் நெசவு

6.தொழிலின் பெருமை

7.தொழில் கலாசாலை

8.தொழிலாளருக்கு சிலவார்த்தைகள்

9.தொழிலுக்கும் செல்வத்துக்கும்உள்ளசம்மந்தம்

10.தொழில்களின் ஒற்றுமை

## தாய் மொழிப்பற்று

அமிழ்தினும் இனிய தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது அளவுகடந்த பற்றும், பாசமும், கொண்டவர் பாரதியார். அதைத்தம் எழுத்துகள் மூலம் வெளிப்படுத்தினார். அவர்காலத்தில் தாய்மொழியாம் தமிழ்மொழி சிறுமைப்படுத்தப்பட்டு ஆங்கிலக்கல்வி பெருமைப்படுத்தப்பட்டது. இந்நிலையைக் கண்டு மனம் நொந்தார். ஆங்கிலக்கல்வி பயின்ற சிலர் தமிழ்மொழியைக் குறைவு படுத்தியது கண்டு பொங்கி எழுந்தார். தன் எதிர்ப்பைக்கட்டுரைகள் மூலம்பதிவு செய்தார். தமிழ்மொழியின் பழமைகுறித்தும், அதன் சிறப்புகுறித்தும் எப்பொழுதும் பெருமை கொண்டிருந்தார். தமிழின் பெருமையை வெளிப்படுத்திய அவரது கட்டுரைகள் வருமாறு:

1.தமிழ்

2.கன்னித் தமிழ்

3.மதுரைத் தமிழ்ச்சங்கம்

4.தமிழ் வளர்த்தல்

5.தமிழில் சாஸ்திரப்பாஷை

6.தமிழ் பாஷைக்குள்ளகுறைகள்

7.தமிழில் எழுத்துக்குறை

**தத்துவம் மற்றும் சமயம்**

பாரதியார் சிறந்த ஆன்மீகவாதியாவார். அவர் ஒப்பற்றதத்துவமேதையாவார். ஆவர் சமரசச்சமய நோக்கம் கொண்டவர். பலசமயங்களை அவர்நன்கு அறிந்தவர். இறைவன் ஒருவனே என்று பூரணமாய்நம்பினார். தேவையற்ற சடங்குகளைக் கடுமையாக எதிர்த்தார். அனைத்துச் சமயங்களின் ஒற்றுமை குறித்துப் பேசியும், எழுதியும் வந்தார். இந்தியாவின் பழமைகுறித்தும்ரிஷிகள், வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் புராணங்கள் குறித்தும் பெருமிதம் கொண்டிருந்தார். சமய மற்றும் தத்துவம் குறித்து அவருக்கு இருந்த ஆழ்ந்த புலமை அவரின் பலகட்டுரைகள் வெளிப்படுத்தின. அவரது சமய அறிவாற்றலை வெளிப்படுத்தும் கட்டுரைகள் வருமாறு:

1.இந்து தர்மம்

2.வேதம்

3.ஹிந்து தர்மத்தின்ஜீவத்தத்துவங்கள்

4.ரிஷிகளின் கடன்

5.ஆரிய தருமம்

6.ஏசுக் கிறிஸ்துவின்வார்த்தை

7.ஹிந்து சக்திதர்மம்

8.ஸ்ரீமத் பகவத்கீதையும், கொடுஞ்செயல்களும்

9.காளியும் காமனும்.

**முடிவுரை**

ஒரு படைப்பாளியை ஆய்வாளர்கள் சிலதுலாக்கோல் கொண்டு மதிப்பிடுகின்றனர். முதலாவதாக அப்படைப்புகள் சமகாலவாழ்வியல் நிலையைப் பிரதிபலிக்க வேண்டும். மேலும் அவைபொய், புனைந்துரை, புரட்டு இவற்றுக்கு அப்பாற்பட்டுத்திகழ வேண்டும். அவை அப்படைப்பாளியின் ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்து வதாகவும் அமைய வேண்டும். இது தவிர அப்படைப்புகளைப் படிப்போர்மனதில் அவை ஆழமாகப் பதிந்து படிப்போரை இன்புறுத்துவதாக அமைய வேண்டும். யாவற்றுக்கும் மேலாக அவை படிக்கும் வாசகர்களை

அடுத்தநகர்வுக்கு இட்டுச் செல்வதாகவும் அமைய வேண்டும். இவ்வாறான இயல்புகளைக் கொண்டு அமையும் இலக்கியமே செவ்விலக் கியங்களாக (Classical Literature) மதிப்பிடப்படுகின்றன. மேற் சொன்ன அனைத்தையும் கொண்டதாகப் பாரதியின்படைப்புகள் திகழ்கின்றன. அவரதுபடைப்புகளில் குறிப்பாகக்கட்டுரைகளில் அவரின்பன் முகப்பார்வைத்திறன் வெளிப்படுகின்றது. பாரதியார் பன்முகத்திறன் கொண்ட உலகத்தரத்திலான இலக்கியவாதி என்பதற்கு அவரது கட்டுரைகளேசாலச் சிறந்தசான்றாகும்.

தமிழ் இலக்கிய உலகில் தோன்றியஜாம்பவான்களான திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், சேக்கிழார், அருணகிரிநாதர் போன்றோர் இலக்கிய உலகில் சாதனைகள் பலபுரிந்தாலும் பாரதியார் அவர்களின்று மாறுபட்டுத் திகழ்கின்றார். அவரின் சமூக உணர்வும், தேசப்பற்றும், எதிர்காலத்தை உய்த்துணரும் (Inference) ஆற்றலும் மற்றவர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுகின்றது. இத்தகைய மேதையும், ஆளுமைத் திறனும், உள்ள உரமும், ஞானஒளியும் சேர்ந்த ஒருவரைத் தமிழுலகம் முன்னரும்கண்டதில்லை, பின்னரும் காணப் போவதுமில்லை. பாரதியார் மறைந்து ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன. அவருக்குப்பின் எத்தனையோ இலக்கியவாதிகள் தமிழுலகில் தோன்றிவாழ்ந்தும் மறைந்தனர். ஆனாலும் பாரதியார் விட்டுச்சென்ற இடம் இன்னமும் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளது. எதிர்காலத்திலும் அது நிரப்பப்படும் என்று தோன்றவில்லை.

## பார்வை நூற்பட்டியல்

[1] பெரியசாமித் தூரன்,(1978), பாரதிவசனத்திரட்டு, புதுடெல்லி: நேஷனல்புக்டிரஸ்ட்

[2] பத்மநாபன்.ரா.ஆ. (1975), பாரதிபுதையல், சென்னை: அமுதநிலையம்

[3] இளசை மணியன்,(1975), பாரதிதரிசனம், சென்னை: நியூசென்சூரிபுக்ஹவுஸ்லிமிடெட்

[4] சீனி விஸ்வநாதன், (1992), பாரதிகட்டுரைக்களஞ்சியம், சென்னை: ஸ்ரீபுவனேஸ்வரிபதிப்பகம்

[5] ஜெயகாந்தன் &சிற்பிபாலசுப்பிரமணியன், (2015),மகாகவிபாரதியார்கட்டுரைகள், புதுடெல்லி: சாகித்யஅகாதமி.